## ஜிம்பாப்வே



# மழை வேண்டி அழுதல்

*“இதற்கு ஒரே தீர்வு ஜெபிப்பதுதான்” என்று தலைவர் ஒருவர் சொன்னார்.*

பல மாதங்களாக மழையே இல்லை. ஆப்ரிக்கா காய்ந்து, மிகவும் வறண்டுபோனது. மக்காச்சோளம் மற்றும் கோதுமை கதிர்கள் வாடிக் கருகிப்போயின. தக்காளி, வெங்காயம், கேரட், உருளைத் தோட்டங்களும் வறட்சியால் கருகிப்போயின.

அப்போதுதான் ஸொலுஸி அட்வென்ட்டிஸ்ட் மேல்நிலைப் பள்ளியில் சேர்ந்திருந்தார் 22 வயது ஸிபோங்கிலீ. வறட்சியால் அந்தப் பள்ளிக்கூடம் நிரந்தரமாக மூடப்படக்கூடும் என்று பலர் ஊகிக்க ஆரம்பித்தார்கள். அந்தப் பள்ளியின் மாணவர்கள் பலர் அங்குள்ள வயல்களில் வேலைசெய்து அதன் மூலம் கிடைக்கிற பணத்தை வைத்துதான் படிப்புக்கட்டணத்தைச் செலுத்தி வந்தார்கள். அங்கிருந்த வயல்களிலும் தோட்டங்களிலும் விளைகிற விளைப்பொருட்கள் தாம் சமையலுக்குப் பயன்படுத்தப்பட்டன. இந்நிலையில் அங்கே உணவுத்தட்டுப்பாடு நிலவ ஆரம்பித்தது.

அங்கிருந்த அணைக்கட்டிலிருந்துதான் அந்தப் பள்ளிக்கும் சுற்றிலுமிருந்த பகுதிகளுக்கும் தண்ணீர் விநியோகமானது. அந்த அணையில் நீர் வற்றினால் என்னவாகுமென ஸிபோங்கிலீ யோசித்தார். தண்ணீரைப் பயன்படுத்தக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. ஆசிரியர்களும் மாணவர்களும் குழாய்த் தண்ணீரை காலையில் ஒரு மணி நேரம் பயன்படுத்தலாம், மதியம் ஒரு மணி நேரம் பயன்படுத்தலாம், அதேபோல் சாயங்காலம் ஒரு மணி நேரம் பயன் படுத்தலாம்.

சமைக்கவும், துணி துவைக்க வும், குளிக்கவும், கழிவறை பயன் பாட்டிற்கும் அந்த மூன்று மணி நேர தண்ணீரைத்தான் பயன்படுத்த வேண்டும்.

தண்ணீர் இல்லாமல் ஒன்றுமே செய்யமுடியாது, பிழைக்க வழியே இல்லை.

அந்தப் பள்ளி மூடப்படக் கூடு மென்கிற ஊகம் அதிகமாக நிலவ ஆரம்பித்ததால், புதன்கிழமை சாயங் காலத்தில் அதற்காக ஜெபிப்பதற்கு ஆசிரியர்களும் மாணவர்களும் கூடி வந்தார்கள்.

"இதற்கு ஒரே தீர்வு ஜெபிப் பதுதான்" என்று தலைவர் ஒருவர் சொன்னார்.

அதேபோல வெள்ளிக்கிழமை இரவு ஆயத்த ஜெபத்திலும், சனிக் கிழமை காலை ஜெபத்திலும், மாலை ஜெபத்திலும் அதற்காக ஜெபித்தார் கள்.

ஸிபோங்கிலீ ஜெபித்தார். பிற மாணவர்களும் ஆசிரியர்களும் அந்தக் கூட்டங்களில் ஜெபித்தார் கள். அவர்கள் குழுக்களாகப் பிரிந்து, மழை வேண்டி ஆண்டவரி டம் ஜெபித்தார்கள்.

'அன்புள்ள தேவனே, நீர் எங் களுக்கு நியமித்திருக்கிற பணியை நாங்கள் செய்துமுடிப்பதற்கு தண் ணீர் மிகவும் அவசியம்' என்று ஒரு மாணவர் ஜெபித்தார்.

'நாங்கள் உலகத்திற்கு முத் தூதை அறிவிக்கவேண்டும். தண் ணீர் இல்லாமல் அது சாத்தியமில் லை" என்று இன்னொரு மாணவர் ஜெபித்தார்.

மாணவர்கள் தனியாகவும், வீடுகளில் உறவினர்களோடு சேர்ந் தும் ஜெபித்தார்கள். சிலர் உபவாச மிருந்து ஜெபித்தார்கள். சிலர் ஒரு வேளை உபாவாசமிருந்தார்கள், சிலர் இரண்டு வேளை உபவாச மிருந்து, இரவு மட்டும் குறைவாகச் சாப்பிட்டார்கள். வேறு சிலர் வாரத் தில் ஒரு நாளோ, இரண்டு நாட் களோ, மூன்று நாட்களோ மூன்று வேளையும் உபவாசமிருந்தார்கள்.

மாணவர்கள் ஜெபித்தபோது, 1894ம் வருடம் ஸொலுஸி கல்வி நிறுவனம் தொடங்கப்பட்ட நாள் முதல் தேவன் தம் பிரசன்னத்தால் அதை ஆசீர்வதித்து வந்ததைச் சொல்லி ஜெபித்தார்கள். எதிர்கால போதகர்களும் சபை பணியாளர் களும் அந்நிறுவனத்தில் படித்து வந்ததையும் சொல்லி ஜெபித்தார் கள்.

ஸொலுஸி கல்வி நிறுவனத்தை தேவன் நடத்திவந்த விதங்களை யோசித்துப் பார்த்தபோது, ஸிபோங் கிலீயின் விசுவாசம் அதிகரித்தது. ஸொலுஸி கல்வி நிறுவனம் தேவ னுக்கு சொந்தமானது என்பதை உணர்ந்துகொண்டாள்.அவர் தம் பிள்ளைகள்மீது அக்கறையாக இருப் பதையும் அவரே அதை தொடர்ந்து நடத்தக்கூடியவர் என்பதையும் நம் பினாள்.

ஸிபோங்கிலீயும் மற்றவர் களும் இரண்டு மாதங்கள் உபவாச மிருந்து ஜெபித்தார்கள். அந்தச் சமயத்தில், அந்தப் பள்ளிக்கூடம் மூடப்படக்கூடுமென சிலர் நினைத் தார்கள். ஆனால் அப்படி நடக்க வில்லை. வறட்சி மற்றும் கடினமான சூழ்நிலைகளின் மத்தியில், அந்தப்

பள்ளி தாக்குப்பிடித்தது.

தண்ணீர் இல்லாத போதிலும் கூட, தேவன் தங்களுடைய ஜெபங்களைக் கேட்டு, தேவன் அந்தப் பள்ளியை நடத்திய விதத்தை தன்னால் ஒருபோதும் மறக்கமுடியாது என்று ஸிபோங்கிலீ சொன்னாள்.

“அடுத்து மழை பெய்கிற வரையிலும் எங்களிடமிருந்த கொஞ்ச தண்ணீரே போதுமானதாக” இருந்தது என்று சொன்னாள்.

இறுதியாக மழை பெய்த போது, மக்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்கள். மாணவர்களும் ஆசிரியர்களும் ஆலயத்திற்கு வந்து, பாடல்கள் பாடி ஆண்டவரை வாழ்த்தினார்கள். தேவனுடயை இரக்கத்திற்காக எல்லாரும் ஆண்டவரைத் துதித்துப் போற்றினார்கள்.

பிறகு, அந்தப் பள்ளியில் நடைபெற்று வந்த விவசாயப் பணிகள் மீண்டும் துவங்கப்பட்டன. தண்ணீர் கிடைத்ததால், வாழ்க்கை மீண்டும் சகஜ நிலைக்குத் திரும்பியது.

இப்போது ஸொலுஸி நிறுவனத்தில் வேலைசெய்து வரும் ஸிபோங்கிலீ தேவன் இந்த நிறுவனத்தை ஆசீர்வதித்து வருவதை தன் வாழ்நாள் முழுவதும் கண்டு வருவதாகச் சொன்னார்.

“தேவன் ஸொலுஸி நிறுவனத்தை ஆசீர்வதித்திருக்கிறார். அதை என் கண்களால் கண்டிருக்கிறேன். தேவன் பலவழிகளில் ஸொலுஸியை ஆசீர்வதித்திருக்கிறார்” என்று ஸிபோஹ்கிலீ சொன்னார்.

ஸொலுஸி அட்வென்ட்டிஸ்ட் மேல்நிலைப் பள்ளிக்கு சொந்தமாக ஸொலுஸி பல்கலைக்கழகத்திற்கு அருகே வளாகம் ஒன்று கட்டுவதற்கு 1994இல் எடுக்கப்பட்ட பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் ஒரு பகுதி பயன்பட்டது. அந்தக்காணிக்கையின் ஆசீர்வாதத்தை முன்னாள் மாணவர்களும் தற்போதைய மாணவர்களும் உணர்ந்து வருகிறார்கள். இந்தக் காலாண்டில் நீங்கள் கொடுக்கப் போகிற காணிக்கையும் ஜிம்பாப்வேயிலும் அதற்கு அப்பாலும் நீண்டகால தாக்கத்தை உண்டாக்கும். செப்டம்பர் 27ம் தேதியன்றி உதாரத்துவமாக காணிக்கை கொடுப்பதற்கு நன்றி.

## கதைக் குறிப்புகள்

- வரைபடத்தில் ஜிம்பாப்வேயைக் காட்டுங்கள். பிறகு, ஸொலுஸி அட்வென்ட்டிஸ்ட் மேல்நிலை பள்ளிக்கு அருகிலுள்ள புலவாயோ நகரத்தைக் காட்டவும்.
- ஸிபோங்கிலீயின் ஒரு சிறிய காணொளியை யூடியூபில் காண்பதற்கு: bit.ly/Sibongile-SID.
- முகநூலிலிருந்து புகைப்படங்களைப் பதிவிறக்க: bit.ly/fb-mq.
- தென் ஆப்ரிக்கா – இந்தியப் பெருங்கடல் டிவிஷனிலிருந்து ஊழிய விவரங்களையும் துணுக்குகளையும் பதிவிறக்க: bit.ly/sid-2025.
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 5, ‘தனிநபர்களையும் குடும்பங்களையும் ஆவியில் நிறைந்த வாழ்வுள்ளவர்களாக மாற்றவேண்டும்’.